**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**ஜூலை 2025, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வுகளுக்கு தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

**செய்திக்குறிப்பு**

**ஜூலை – 2025 துணைத் தேர்வுகளுக்கு தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

நடைபெறவுள்ள ஜூலை 2025 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) துணைத் தேர்விற்கு, விண்ணப்பிக்க தகுதியுள்ள தனித்தேர்வர்களிடமிருந்தும், மார்ச்/ஏப்ரல் 2025 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்களிடமிருந்தும் இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்**

மார்ச்/ஏப்ரல் 2025, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத்தேர்வினை பள்ளி மாணவர்களாக எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத மாணவர்கள், தேர்ச்சி பெறாத/வருகை புரியாத பாடங்களை மீண்டும் எழுத அவர்கள் பயின்ற பள்ளியில் **22.05.2025 (வியாழக் கிழமை) காலை 11.00 மணி முதல் 04.06.2025 (புதன் கிழமை) மாலை 5.00 மணிக்குள் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக)** விண்ணப்பிக்க வேண்டும்.

**தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்**

ஜூலை 2025, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்விற்கு தற்போது விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுள்ள தனித்தேர்வர்களும் மற்றும் மார்ச்/ஏப்ரல் 2025, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) பொதுத் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தனித்தேர்வர்களும் **22.05.2025 (வியாழக் கிழமை) காலை 11.00 மணி முதல் 04.06.2025 (புதன் கிழமை) மாலை 5.00 மணிக்குள் (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக)** கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service centres) வாயிலாக விண்ணப்பிக்கவேண்டும்.

..2..

<u>சிறப்பு அனுமதித் திட்டம்</u>

22.05.2025 (வியாழக் கிழமை) முதல் 04.06.2025 (புதன் கிழமை) வரையிலான நாட்களில் ஜூலை 2025 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் உரிய கட்டணத் தொகையுடன் **05.06.2025 (வியாழக் கிழமை) மற்றும் 06.06.2025 (வெள்ளிக் கிழமை)** ஆகிய நாட்களில் பள்ளி/சேவை மையங்களில் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

- **பத்தாம் வகுப்பு தேர்விற்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் – ரூ.500/–**
- **மேல்நிலை முதலாம்ஆண்டு தேர்விற்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் – ரூ.1000/–**

சிறப்பு அனுமதிக் கட்டணம் – ரூ.500/– மற்றும் ரூ.1000/– **(2024–2025 –ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் முழுமையான அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பயின்று தேர்ச்சிப்பெறாத / வருகைப்புரியாத மாணவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுகிறது)**

**<u>பத்தாம் வகுப்பு தேர்வுக்கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/– |
| 2. | ஆன்–லைன் பதிவு கட்டணம் | ரூ.70/– |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.195/–** |

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வுக் கட்டணம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | ஏற்கனவே மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்கள் | ➢ தேர்வுக் கட்டணம், ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/–<br>➢ இதரக் கட்டணம் ரூ35/–<br>➢ ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/– |
| 2. | மேல்நிலை முதலாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுதவுள்ள தேர்வர்கள் | ➢ தேர்வுக் கட்டணம் ரூ.150/–<br>➢ இதரக் கட்டணம் ரூ.35/–<br>மொத்தம் ரூ.185/–<br>➢ ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.70/– |

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையத்தில் / பள்ளியில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>பத்தாம் வகுப்பு அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள்:-</u>**

ஜூலை-2025 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கவுள்ள நேரடித் தனித் தேர்வர்களும் (முதன் முறையாக அனைத்துப் பாடங்களையும் தேர்வு எழுத இருப்பவர்கள்) ஏற்கனவே 2012க்கு முன்னர் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்றவர்களும், மற்றும் மார்ச்/ஏப்ரல்-2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் தேர்ச்சிபெறாதவர்கள் / வருகை புரியாதவர்கள் ஆகியோர் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேர **23.05.2025 (வெள்ளிக் கிழமை) முதல் 30.05.2025 (வெள்ளிக் கிழமை) (ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக)** வரையிலான நாட்களில் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு சென்று, கட்டணம் ரூ.125/-ஐ பணமாக செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்து ஒப்புகை சீட்டு பெற்று கொள்ள வேண்டும். **ஒப்புகைச் சீட்டை சேவை மையத்தில் காண்பித்தால் மட்டுமே கருத்தியல் தேர்விற்கு பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.**

**செய்முறைத் தேர்வு மட்டும் எழுதவுள்ள தனித்தேர்வர்களும் தவறாமல் சேவை மையத்திற்கு (NODAL CENTRE) சென்று அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கும் விண்ணப்பித்து ஒப்புகைச் சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வர்கள் தங்களது ஒப்புகைச் சீட்டில் உள்ள விண்ணப்ப எண்ணை பயன்படுத்தி இத்துறையால் வழங்கப்படும் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டை பதிவிறக்கம் செய்து செய்முறைத்தேர்வில் கலந்துகொள்ள வேண்டும். தேர்வுக்கூட நுழைவு சீட்டு கொண்ட தேர்வர்கள் மட்டுமே செய்முறைத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.**

தேர்வர்கள் செய்முறைத் தேர்வு நடத்தப்படும் நாட்கள் மற்றும் மைய விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு அறிந்து செய்முறைத் தேர்வினை தவறாமல் எழுதிட வேண்டும்.

**<u>விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service centres)</u>**

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்களின் (Government Examinations Service centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம்.

**<u>தேர்வுக்கால அட்டவணை</u>**

ஜூலை 2025, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வுக்கான தேர்வுக் கால அட்டவணைகளை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஒம்/–
இயக்குநர்

இடம்: சென்னை–6
நாள் : 16.05.2025.